2007 மார்ச் 23] [பேரா சிரியர் க. அன்பழகன்]

உரிய பிரதிநிதித்துவம் கிடைத்திடத் தேவையான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். சிறுபான்மையினரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசின் தனி கவனம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் நலனுக்கென ஒரு தனி இயக்குனரகம் அமைத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

127. அரசு மற்றும் தனியார் துறைகளில் அதிக வேலைவாய்ப்புகளையும், சுய வேலைவாய்ப்புகளையும் பெற, சிறுபான்மையினரைத் தகுதியடையச் செய்யும் நோக்குடன், 2007–2008ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் திறன் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம், ரூபாய் 2.50 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், 5,000 சிறுபான்மையின இளைஞர்கள் மற்றும் பெண்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள், ஆயத்த ஆடை தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படும். வரும் நிதியாண்டில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், 21,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 30 கோடி கடன் உதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## இலங்கைத் தமிழர் நலன்

128. தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இருமடங்காக உயர்த்தியதோடு, அகதிகள் முகாம்களில் உள்ள வசதிகளை மேம்படுத்தவும், இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கையில் வாழும் தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் தொடர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, பல ஆண்டுகளாக நிலவி வரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, இந்திய அரசு விரும்புகின்ற வகையில் பேச்சுவார்த்தைகள் மூலமாக அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–15

## சத்துணவில் முட்டை வழங்கும் திட்டம்

129. அனைத்துக் குழந்தைகளுக்கும் சத்தான உணவு கிடைக்கச் செய்யும் வகையில், கல்வி வளர்ச்சி நாளாம் காமராஜர் பிறந்த நாள்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 மார்ச் 23

முதல், வாரம் இருமுறை முட்டைகள் வழங்கும் திட்டத்தை இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 68,14,601 குழந்தைகள் சத்தான உணவு உண்டு வருகின்றனர். கல்வி கற்கும் பருவத்தில் குழந்தைகளின் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவு மற்றும் உடல் வளர்ச்சிக்குச் சிறந்த புரதச் சத்து அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கு மேலும் கூடுதல் ஊட்டச்சத்து அளிக்கும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) வரும் கல்வி வளர்ச்சி நாள் முதல், இத்திட்டத்தின்கீழ் வாரம் மூன்று முறை முட்டை வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 53 கோடி கூடுதல் செலவு ஏற்படும். 2007–2008ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 165 கோடியும் மொத்தமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரால் அமைந்துள்ள சத்துணவுத் திட்டத்திற்கு ரூபாய் 781 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

130. செம்மொழித் தகுதியை நமது தமிழ் மொழிக்கு மத்திய அரசு வழங்கியுள்ள போதிலும், முறைப்படி அதற்கான உரிமைகளையும், சிறப்புகளையும், அதிகாரம், நிதியாதாரம் ஆகியவற்றையும் பெறுவதற்கு வலுவாக வாதிட வேண்டிய நிலைமை இன்னமும் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, தமிழ் மக்களின் கவலை தீரவும், களிப்பு மேலிடவும் தமிழக அரசும், தமிழகச் செம்மொழிக் குழுவினரும் வலியுறுத்தி வேண்டுகின்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையின் தாமதத்தைத் தவிர்த்திட, இந்த அரசு முனைப்பான முயற்சிகள் மேற்கொண்டு, தொடர்ந்து செயல்படும்.

131. மத்திய ஆட்சி மொழிகளாக மாநில ஆட்சி மொழிகளும் இடம்பெற வேண்டுமென்றும், அதில் தவிர்க்க முடியாத சிக்கல் இருப்பின், முதலில் தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கிட வேண்டுமென்றும், திருச்சியில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில மாநாட்டிலிருந்து தி.மு. கழகம் கூறி வருவதை நிறைவேற்ற மத்திய அரசு முன் வரவேண்டுமென வலியுறுத்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

132. 1974ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின்கீழ், திட்டமிடப்பட்ட 31 பகுதிகளில் இதுவரை 18 பகுதிகள் அச்சிட்டு ஏற்கெனவே வெளியிடப்பட்டும்,